இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 69 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 02 – ஞாயிற்றுக்கிழமை 19 அக்டோபர் 2025 – சென்னை 16 + 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 69 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 02 - Sunday 19 October 2025 - Chennai 16 + 16 Pages ₹ 5.00

## ஊழல்வாதிகள் பா.ஜ.க.வின் கூட்டணிக்கு வந்த பிறகு

# வாஷிங்மெஷினில் வெளுப்பது எப்படி?

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்வி!

சென்னை, அக்.19 -

**“ஊழல்வாதிகள் பா.ஜ.க.வின் கூட்டணிக்கு வந்த பிறகு வாஷிங் மெஷினில் வெளுப்பது எப்படி?” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேள்வி எழுப்பியுள்ளார்.**

ஒன்றிய அரசின் செயல்பாடுகளில் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் ஏராளமான கேள்விகள் நிரம்பியுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கு மட்டுமல்ல, நாட்டு மக்களின் நெஞ்சங்களிலும் ஏராளமான கேள்விகள் நிரம்பியுள்ளன. அவற்றில் சிலவற்றை நான் கேட்கிறேன்:

- **ஊழல்வாதிகள் பா.ஜ.க.வின் கூட்டணிக்கு வந்தபின்பு, வாஷிங்மிஷினில் வெளுப்பது எப்படி?**
- **நாட்டின் முக்கியமான திட்டங்களுக்கும், சட்டங்களுக்கும் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் மட்டுமே பெயரிடப்படுவது என்ன மாதிரியான ஆணவம்?**
- **ஒன்றிய அமைச்சர்களே நம் குழந்தைகளை அறிவியலுக்குப் புறம்பான மூடநம்பிக்கைகளைச் சொல்லி மட்டுப்படுத்துவது ஏன்?**
- **எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், ஆளுநர்களை வைத்துக் குழப்பம் விளைவித்து என்ன சாதிக்கப் போகிறீர்கள்?**
- **பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றிக்காக, மக்களின் வாக்குகளைப் பறிக்கும் வாக்குத் திருட்டை SIR ஆதரிப்பது ஏன்?**
- **இரும்பின் தொன்மை குறித்து அறிவியல்பூர்வமாகத் தமிழ்நாடு மெய்ப்பித்த அறிக்கையைக்கூட அங்கீகரிக்க மனம் வராதது ஏன்?**
- **கீழடி அறிக்கையைத் தடுக்கக் குட்டிக்கரணங்கள் போடுவது ஏன்?**
- **இதற்கெல்லாம் பதில் வருமா?**
- **இல்லை வழக்கம்போல, வாட்சப் யூனிவர்சிட்டியில் பொய்ப் பிரச்சாரத்தைத் தொடங்குவீர்களா?**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### ‘பெரியார் உலக’த்திற்கு தி.மு.க. சார்பில் ரூ.1.70 கோடி நிதி!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2025) சென்னை, பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களைச் சந்தித்து, திராவிட இயக்கத்தின் வரலாற்றைச் பறைசாற்றும் அறிவுக் கருவூலமாக, தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், அறிவுச் செல்வத்தையும் எடுத்துரைக்கும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகனூரில் அமைக்கப்பட்டு வரும் ‘பெரியார் உலகம்’ பணிக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத சம்பளத் தொகையான 1 கோடியே 70 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### “தமிழ்நாடு தலைகுனியாது!” கழகத் தலைவர் – முதல்வர் மு.க,ஸ்டாலின் தலைமையில்

## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம்!

### கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் திட்டமிடலின்படி வருகின்ற சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை கழகம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டை வளைத்திட முயற்சிக்கும் வஞ்சக சூழ்ச்சி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசின் முன்பு **“தமிழ்நாடு தலைகுனியாது”** என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒரு பகுதியாக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் கழத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில்,



முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் **“என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி”** என்ற **முன்னெடுப்புக்காக “கழக மாவட்டச் செயலாளர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்” 28.10.2025 - செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணி அளவில் மாமல்லபுரம், ஈ.சி.ஆர். சாலையில் உள்ள “கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்”** (Confluence Hall)ல் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 18.10.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### கலைஞர் பல்கலை, மசோதா ஒப்புதல் வழக்கு!

## குடியரசுத் தலைவர் வழக்கின் தீர்ப்புக்குப் பின் விசாரணை!

### உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு அறிவிப்பு!

புதுடெல்லி, அக். 19 -

கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகம் அமைக்க தமிழக அரசு முடிவு செய்து, அதற்கான சட்ட மசோதா கடந்த ஏப்ரல் மாதம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவின்படி, முதலமைச்சர் வேந்தராகவும், உயர் கல்வித் துறை அமைச்சர் இணைவேந்தராகவும் செயல்படுவார்கள் என்றும், தேடுதல் குழு மூலம் துணைவேந்தர் நியமிக்கப்படுவார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மசோதா, ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அவர் அதனை குடியரசுத் தலைவரின் முடிவுக்கு அனுப்பி வைத்தார். ஆளுநரின் இந்த நடவடிக்கை, சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானது எனக் கூறி, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, ஒன்றிய அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர், ‘கடந்த 2015ம் ஆண்டு முதல் 381 மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். ஒவ்வொரு மசோதாவுக்கும் தொடர்பாக மாநில அரசுகள் நீதிமன்றத்தை எதற்காக நாட வேண்டும்? குடியரசுத் தலைவர் ஒவ்வொரு மசோதாவிற்கும் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பார்’ என்று வாதிட்டார்.

இதனைக் கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, ‘ஆளுநர் விவகாரம் தொடர்பாக குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் அடங்கிய வழக்கின் தீர்ப்பு நிலுவையில் உள்ளது.

வரும் நவம்பர் 21ம் தேதி அந்த வழக்கிற்கு தீர்ப்பு வரட்டும். அதன்பிறகு, இந்த வழக்கை விசாரித்து முடிவெடுக்கப்படும்’ என்று கூறி, விசாரணையை ஒத்தி வைத்தது.